මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/71** **2024.09.09**

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

### அனைத்து வாகனங்களிலும் முச்சக்கர வண்டிகளிலும் ஒட்டப்பட்டுள்ள ஒட்டிகளை (ஸ்ரிக்கர்) அகற்றுதல்

சனாதிபதித் தேர்தல் பிரகடனம் செய்யப்பட்டிருப்பதனால், தேர்தல் சட்டவிதிகளுக்கு ஒத்திசைவற்ற விதத்தில் தனியார் பஸ் வண்டிகளிலும் முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட தனியார் வாகனங்களிலும் ஒவ்வொரு வேட்பாளருக்கும்/கட்சிக்கும் ஆதரவுகூட்டும் நோக்குடன் வாசகங்கள், சின்னங்கள், புகைப்படங்கள் அடங்கிய ஒட்டிகள், கொடிகள் முதலியவற்றைக் காட்சிப்படுத்துதல் பற்றிய முறைப்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

அவ்வாறான ஒரு செயல் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 74 ஆம் பிரிவின் கீழ் ஒரு தவறாகுமென்பதால் தனியார் பஸ் வண்டிகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய தனியார் வாகனங்களில் அவ்வாறான ஒட்டிகள் ஒட்டப்பட்டிருப்பின் உடனடியாக அவற்றை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தனியார் பஸ் வண்டிகள், முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட அனைத்து தனியார் வாகனங்களிலும் ஒட்டப்பட்டிருக்கும் மேற்படி வகைக்குரிய ஒட்டிகளை கழற்றி அகற்றுவதற்கு ஒவ்வொரு பொலிஸ் அதிகாரப் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் திடீர் சோதிப்புகளை மேற்கொள்வதற்கு அந்தந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும், பிரிவுகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளுக்கும், அதன் மூலம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் துரிதமாக வழங்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)